ந.க.எண்.64350/2022/MGNREGS-I-2.
நாள்: 09.10.2023

இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை,
சென்னை-15.

## சுற்றறிக்கை.

ஐயா / அம்மையீர்,

பொருள் – மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் – திட்ட செயலாக்கம் – மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளை வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றி பணிகளை செயல்படுத்துதல் – தொடர்பாக.

................

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினை மாவட்டங்களில் செயல்படுத்துதல் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு:-

**வேலை அட்டை வழங்குதல் / வேலை வழங்குதல்:**

வேலை அட்டை கோரும் அனைத்து தகுதியான குடும்பங்களுக்கும் வேலை அட்டை வழங்கி, 15 நாட்களுக்குள் வேலை வழங்கப்பட வேண்டும். வேலை அட்டை மாதம் ஒரு முறை சரிபார்க்கப்பட வேண்டும். இதனை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

**வேலை வழங்குதல்:**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளைச் செய்யும்போது ஒவ்வொரு குழுவிலும் 20 நபர்கள் இருத்தல் வேண்டும். இவர்கள் தினசரி வருகைப்பட்டியலின்படி இருபது இருபது நபர்களாக வேலை செய்திட வேண்டும். ஒரு குழுவில் உள்ளவர்கள் ஒரு வாரத்திற்கு அதே குழுவில் வேலை செய்ய வேண்டும். குழுவிலுள்ள 2 நபர்கள் வரவில்லையெனில் மீதமுள்ள 18 பேர் கொண்டு பணியினை தொடர வேண்டும். அப்படி செய்தால் தான் measurement எடுக்கும் போது சரியாக இருக்கும் பணி மேற்பார்வையாளர்கள் Group measurement எடுக்க வேண்டும். மதிப்பீட்டிற்கு அதிகமாக பணியாளர்களை ஈடுபடுத்தினால்

கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அதனடிப்படையிலேயே பணிமேற்பார்வையாளர் வாரியாக Minimum wage and maximum wage குறித்த அறிக்கையை கண்காணித்திட துணை வ.வ.அ(ம.கா.தே.ஊ.வே.உ.தி) கண்காணிக்க வேண்டும்.

- ஒரு நபர் ஒரு நாளைக்கு ரூ.294 கூலி பெறுவதற்கு 94 செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிட வேண்டும் அல்லது 15 மரக்கன்றுகள் நடுதல் வேண்டும் அல்லது 4 குழிகள் எடுத்தல் வேண்டும். எனவே, மரக்கன்றுகளுக்கு ஏற்ப எத்தனை பணியாளர்கள் உள்ளனர், எத்தனை மனித சக்தி நாட்கள் உள்ளன, ஆகியவைகளை கணக்கிட்டு பணியாளர்கள் குறித்து backwork மேற்கொண்டு கண்காணிக்க வேண்டும். தேவைக்கு அதிக எண்ணிக்கையில் பணியாளர்களை ஈடுபடுத்தினால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு பணியாளர்கள் குறித்து backwork மேற்கொண்டு கண்காணிக்க வேண்டும். (எ.கா பண்ணை குட்டை பணிகளுக்கு ரூ.4.00 இலட்சம் எனில் ஒரு நாளுக்கான கூலி 294 வகுத்தால் 1360 மனித சக்தி நாட்கள் தேவைப்படும், இதனை 4 வாரத்தில் முடித்திட 340 மனித சக்தி நாட்கள் தேவைப்படும், ஒரு வாரத்திற்கு 57 (340/6 நாட்கள்) பணியாளர்களை பயன்படுத்திடும் போது பணியினை குறிப்பிட்ட தேதியில் முடித்திட முடியும்.
- கூலித் தொகை (Labour Component) முழுமையாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மரக்கன்று நடுதல் (Plantation), பண்ணைக் குட்டை (Farm Pond), Trench Cutting மற்றும் கசிவுநீர்க் குட்டை போன்ற பணிகள் அதிகமாக எடுக்கப்பட வேண்டும்.

**தனி நபர் சொத்து உருவாக்கும் பணிகள்:**

- தனி நபர் சொத்து உருவாக்கும் பணிகளில் மக்கள் பங்கேற்பு முறையில் தெரிவு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியலில் உள்ள மக்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும் அவ்வாறு தகுதியான (PIP) பயனாளிகள் இல்லையெனில் உரிய கள ஆய்வு சான்றுடன் திருத்திய அட்டவணை – பத்தி 5–ல் உள்ள இதர தகுதியான பயனாளிகளுக்கு பணிகள் வழங்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
- மண்டல துணை வ.வ.அலுவலர்கள் தனி நபர் சொத்து சார்ந்து பயனாளிகள் தகுதியானவர்களா என ஆய்வு செய்யும்போது கவனமாக, உரிய விதிமுறைகளை படித்து பார்த்து பரிந்துரை செய்திட வேண்டும்.

**இயற்கை வள மேலாண்மை மற்றும் விவசாயம்/விவசாயம் சார் பணிகள்:**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி மொத செலவீனத்தில் 65% க்கு குறையாமல் இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கும் 60% க்கு குறையாமல் விவசாயம்/விவசாயம் சார் பணிகளும் மேற்கொள்ளப்படவேண்டும்.
- மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள ஆண்டு முதன்மை சுற்றறிக்கை 2022-23ன் படி அனுமதிக்கப்பட்ட 266 பணிகளில் 139 பணிகள் இயற்கை வள மேலாண்மை மற்றும் விவசாயம்/விவசாயம் சார் பணிகள் இரண்டின் கீழும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி மேற்குறிய சதவீதத்தை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

**நிர்வாக அனுமதி வழங்குதல்:**

- மண் வேலை சார்ந்த பணிகள் மற்றும் பொருட்கூறு சார்ந்த பணிகள் உட்பட அனைத்து பணிகளுக்கும் மாவட்ட ஆட்சியரிடம் நிர்வாக அனுமதி பெறவேண்டும். மாவட்ட ஆட்சியரிடம் நிர்வாக அனுமதி வாங்காமல் எந்த பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது. நிர்வாக அனுமதி ஆணை ஊராட்சி / ஊராட்சி ஒன்றியம் வாரியாக மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டு, அதன் பின்பு தான் SECURE மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளுக்கும் SECURE தளத்தில் மதிப்பீடு தயார் செய்வதற்கு முன் கையேடு மதிப்பீடு (Manual Estimate) தயார் செய்து ஒப்புதல் பெற வேண்டும்.

**மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு பதிவேடு:**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளுக்கு நிர்வாக அனுமதி (Administrative Sanction) அளிக்கப்பட்டவுடன் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு பதிவேட்டில் (Estimate and Allotment Register) உடனடியாக பதிவுகள் செய்யப்பட வேண்டும்.

- கடந்த ஆண்டு மார்ச் மாதத்திற்கு பிறகு பணிகள் நிலுவையில் இருந்தால் அப்பணிகளை நடப்பு ஆண்டு மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு பதிவேட்டில் (Estimate and Allotment Register) முதலில் Spill Over பணிகளை பதிவு செய்த பிறகே நடப்பு ஆண்டு பணிகளை பதிவு செய்ய வேண்டும். பழைய பணிகளை பழைய ஆண்டு மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு பதிவேட்டிலேயே பதிவுகளை மேற்கொள்ளுதல் கூடாது.
- மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு பதிவேட்டில் (E & AR) பணிகளை பதிவு செய்யாமல் எந்த ஒரு பணிக்கும் பட்டியல் அனுமதிக்க கூடாது.

**குறித்த நேரத்தில் ஊதியம் வழங்குதல்:**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் Aadhar Based Payment–க்காக விண்ணப்பங்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட மண்டல துணை வ.வ.அலுவார்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு சென்று சம்பந்தப்பட்ட மேலாளர்களிடம் தொடர்பு கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். வ.வ.அலுவலர்கள்(கி.ஊ) தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
- கணிணி இயக்குநர் 5 தினங்களுக்குள் (புதன்கிழமைக்குள்) ஊதியப்பட்டியல் தயார்செய்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (MGNREGS) அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- ஊதியப்பட்டில் 5 தினங்களுக்குள் (புதன்கிழமைக்குள்) சரிபார்க்கப்பட்டு பண பரிமாற்று ஆணை தயார் செய்து தொழிலாளரின் வங்கிக்கணக்கில் ஊதியம் வழங்குவதற்காக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (MGNREGS) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) டிஜிட்டல் கையெழுத்திட வேண்டும். அவர்களே கணினி முன் அமர்ந்து DSCயை பயன்படுத்த வேண்டும்.
- மேற்கண்டவாறு அனைத்து அலுவலர்களும் உரிய கால வரம்பிற்குள் தங்களது பணியினை முடித்து 15 தினங்களுக்குள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

**கள ஆய்வு:**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை தொடர்ந்து கண்காணிக்க மாவட்ட அளவிலான அலுலர்கள் கீழ்கண்டவாறு கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

| வ. எண். | அலுவலர் | ஒரு மாதத்தில் மேற்கொள்ளவேண்டிய கள ஆய்வு செய்ய வேண்டிய கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | திட்ட அலுவலர் | 10 கிராம ஊராட்சி (20 பணிகள்) |
| 2 | செயற்பொறியாளர் | 12 கிராம ஊராட்சி (24 பணிகள்) |
| 3 | உதவி திட்ட அலுவலர் (வே.வா)/ உதவி செயற்பொறியாளர் (உப) | 15 கிராம ஊராட்சி (30 பணிகள்) |
| 4 | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) | 20 கிராம ஊராட்சி (40 பணிகள்) |
| 5 | மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | அனைத்து ஊராட்சிகள் / அனைத்து பணிகள் |

கள ஆய்வு மேற்கொள்ளும் போது வருகைப்பதிவேடு (NMR) மக்கள் தகவல் பலகை (CIB), work file பணியின் முன்னேற்றம் ஆகியவை ஆய்வு செய்யப்பட வேண்டும். செயற்பொறியாளர் முதல் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் வரையிலான அலுவலர்கள் கள ஆய்வு தொடர்பான மாதாந்திர அறிக்கையினை ஒரு பணிக்கு 3 புகைப்படங்களுடன் Geo coordinate மற்றும் Timestamp உடன் திட்ட இயக்குநருக்கு சமர்ப்பிக்க வேண்டும். திட்ட இயக்குநர் தனது கள ஆய்வு அறிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு சமர்ப்பித்து மாதாந்திர திட்ட இயக்குநர் / செயற்பொறியாளர் ஆய்வுக் கூட்டத்தில் இயக்குநரின் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**ஆய்வுக் கூட்டங்கள்:**

- மாதம் ஒரு முறை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)–க்கு திட்ட இயக்குநரால் ஆய்வு நடத்தப்பட வேண்டும்.
- ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அன்று அனைத்து மண்டல துணை வ.வ.அலுவலர்கள் மற்றும் துணை வ.வ.அலுவலர் (MGNREGS) ஆய்வுக்கூட்டம் திட்ட இயக்குநர் அவர்களால் நடத்தப்படும். அப்போது அந்த வாரத்திற்கான கள ஆய்வு மேற்கொண்டமைக்கான கள ஆய்வு படிவம் சமர்ப்பிக்க வேண்டும்.
- மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் நடைபெறும் வெள்ளிக்கிழமை ஆய்வுக்கூட்டத்திற்கு வரும்போது ஒவ்வொரு மண்டல துணை வ.வ.அலுவலர்களும் அவர்கள் பொறுப்பில் உள்ள 251 ஊராட்சிகளின் பதிவேடுகளை (MGNREGS Registers) கொண்டு வந்து காண்பிக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய அளவில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை துணை வ.வ.அலுவலர் (MGNREGS) பதிவு செய்து வெள்ளிக்கிழமை காண்பிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகள் / தெளிவுரைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களால் பிறழ்ச்சியின்றி கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இத்தெளிவுரைகளில் வழங்கியுள்ள நடைமுறையைக் கடைப்பிடிக்காத அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./–பா.பொன்னையா
இயக்குநர்

//ஆணைப்படி//

10.10.23
உதவி இயக்குநர்

பெறுநர்
மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
அனைத்து மாவட்டங்கள்.

10.10.23

நகல்

திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
அனைத்து மாவட்டங்கள்.